பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 14

செவ்வாய்க்கிழமை
10 டிசெம்பர் 2024

கார்த்திகை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## 10,000 தொன் அரிசியுடன் இந்தியக் கப்பல்

கொழும்பு, டிசெ. 10
10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியுடன் இந்தியக் கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்துக்கு 11

# வடக்கை மிரட்டும் மர்மக் காய்ச்சல்!

### நேற்றும் ஒருவர் உயிரிழப்பு
### அச்சத்தில் மருத்துவத்துறை

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 10**

**வடமாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பரவிவரும் மர்மக் காய்ச்சல் காரணமாக, நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இதனால் நாளுக்கு நாள் நிலைமை ஆபத்தானதாக மாறி வருகின்றது என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.** 11

### சர்வதேச மனித உரிமைகள் தினம்
## வடக்கு - கிழக்கில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 10
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இன்று பெரும் 11

## மின்சாரக் கட்டணத்தை 30 வீதம் குறையுங்கள்!

### இல்லையேல் போராட்டம் வெடிக்கும்
### மின் பாவனையாளர் சங்கம் எச்சரிப்பு

கொழும்பு, டிசெ. 10
மின்கட்டணங்களை 30 வீதத்தால் குறைக்காவிட்டால், ஜனவரி மாதம்முதல் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்போம் என்று மின் பாவனையாளர் சங்கம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் மின் பாவனையாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது:-
மின்கட்டணத்தைக் குறைப்பதாகக் கூறியே 11



## அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிவாஜிலிங்கம் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 10
யாழ். மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், மூத்த தமிழ் அரசியல்வாதியும், தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதியும் கொண்டவருமான சிவாஜிலிங்கம் கொழும்பு மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவப் பரிசோதனைக்காகக் கொழும்புக்குச் சென்றபோதே அவருடைய உடல்நிலை மோசமாகி கொள்ளுப்பிட்டி தனியார் மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த 2 நாள்களாக அவருக்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
(அ-ம-66-27-100-26)

### வெள்ளத்தால் பயிரழிவு
## இழப்பீடுகளுக்கு விண்ணப்பிக்குக

கொழும்பு, டிசெ. 10
அண்மையில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தமக்கான இழப்பீட்டுக்காக விண்ணப்பிக்க முடியும் என்று கமத்தொழில் காப்புறுதிச்சபை அறிவித்துள்ளது.
வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. 11

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 10
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து இடையூறுகளை ஏற்படுத்தி, அச்சுறுத் 11

## பொதுத்தேர்தல் கணக்கறிக்கை: 306 பேர் வன்னியில் சமர்ப்பிப்பு

வவுனியா, டிசெ. 10
வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 34 தரப்புகளைச் சேர்ந்த 306 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் செலவு அறிக்கையை கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுக் 11

## வெளிநாட்டு ஆசைகாட்டி பெருந்தொகை மோசடி!

### வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, டிசெ. 10
கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பெருந்தொகை பணத்தை மோசடி செய்த நபரொருவர் வவுனியாப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய 11

## தீயில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரணவாய் பகுதியில் தீயில் எரிந்த நிலையில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11




## தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளத்தில் விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கை

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, டிசெ. 10
முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக கிராமங்களான தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் பகுதிகளுக்கு நேற்று நேரில் சென்ற அவர், அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணிலின் சிந்தனையில் பயணிக்கும் அநுர அரசு

## சாடுகின்றார் சஜித்



**கொழும்பு, டிசெ.10**

**பெரும் மக்கள் ஆணையைப் பெற்ற தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணயநிதிய உடன்பாடு தொடர்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச நாணயநிதியக் கொள்கைகளையே தற்போதைய அரசாங்கமும் பின்பற்றுகின்றது.

இது மக்களை ஏமாற்றும் கடும் துரோகச் செயலாகும். எதிர்க்கட்சியில் இருந்தபோது சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளை அவர்கள் பேசினார்கள். புதிய ஒப்பந்தத்துக்குச் செல்வோம் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தனர். ஆனால் அதிகாரத்துக்கு வந்தபின்னர் வாக்குறுதிகளை மீறியுள்ளனர்.

நாட்டின் கடன் சுமை அதிகரிக்கும் போது சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் பல பிரச்சினைகள் ஏற்படும். இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் - என்றார். (ஏ-இ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.10

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாகோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே உயிரிழந்த வராவார். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளநிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-இ)

# வினைத்திறனான அரசாங்கத்துக்கு விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் அவசியம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.10

விஞ்ஞானபூர்வமான தரவுகள், ஆதாரங்களை அடிப்படையாக வைத்து, ஆய்வுகளை மேற்கொண்டு நாட்டை புதிய பாதையூடாகக் கொண்டு செல்வதே எமது நோக்கம் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். இலங்கை விஞ்ஞான மன்றத்தால் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட டிஜிற்றல் நூலக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் நாங்கள் உயர்மட்ட தீர்மானங்களை எடுக்கும்போது வழங்கப்பட்ட தரவுகள் விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்யப்படவில்லை. இது மாற்றியமைக்கப்பட வேண்டும். வினைத்திறனுடன் ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்யப்பட்ட தரவுகள் அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-25,6)

# 'ரீல்ஸ்' எடுக்க முயன்ற சீனப் பெண் காயம்!

கொழும்பு, டிசெ.10

ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து சீனப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். வெள்ளவத்தைக்கும், பம்பலப்பிட்டிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ரயில் பெட்டியின் வாயிலில் தொங்கியவாறு கைபேசியில் நண்பர் மூலம் காணொலி பதிவுசெய்ய முயன்றபோது, மரக்கிளை ஒன்று தாக்கியதில் அவர் நிலைதடுமாறி வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் புதர் ஒன்றுக்குள் வீழ்ந்ததால் பலத்த காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-45)

# விடுதி சுற்றிவளைப்பு நால்வர் கைது



கொழும்பு, டிசெ.10

களுத்துறை வடக்கில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த சமூக விரோத மையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு, அங்கிருந்த 3 பெண்கள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# கிணற்றில் வீழ்ந்து இளைஞன் சாவு

நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளை கழுவுவதற்காகச் சென்ற 18 வயது இளைஞர் ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். களுத்துறை, பணாபிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளை கழுவிக்கொண்டிருந்தபோது வாளி கிணற்றில் வீழ்ந்துள்ளது. அதை எடுக்க முயன்றபோதே இளைஞர் கிணற்றில் வீழ்ந்து நீரில் மூழ்கியுள்ளார். (ஏ-45)

# ஆணின் சடலம் மீட்பு மரணத்தில் சந்தேகம்

கொழும்பு, டிசெ.10

அநுராதபுரம், வலவ்வேகம பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் கடந்த சனிக்கிழமை இரவு தனது வீட்டில் பிறிதொருவருடன் இணைந்து மதுபானம் அருந்தியுள்ளமை தெரிய வந்துள்ளது. அவர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த மரணம் சம்பவித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# தேசியப்பட்டியல் நியமனத்தில் திக்குமுக்காடுகிறது ஐ.ம.சக்தி



கொழும்பு, டிசெ.10

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நியமனம் தொடர்பாக இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கட்சி முழுமையாக சீரமைக்கப்படாவிட்டால் மக்கள் மனங்களை வெல்லமுடியாது என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட வாக்கு வீதத்துக்கு அமைய 5 தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன. தற்போது கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனையவர்கள் தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை.

கூட்டணி என்றவகையில் பல இணக்கப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. தேசியப்பட்டியல் நியமனத்துக்காகப் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயங்களை ஆராய்ந்து ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி முழுமையாக மறுசீரமைக்கப்படவேண்டும் - என்றார். (ஏ-25)

# பொருள்களின் விலையேற்றத்தால் விசனிக்கவில்லை நாட்டுமக்கள்

## தே.ம.சக்தி எம்.பி. உபுல் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.10

பொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் பொதுமக்கள் தற்போதைய அரசாங்கத்தின்மீது குறைகாணவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் அபேவிக்ரம தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டை சீரழித்து அனைத்துப் பொருள்களின் விலைகள் உயர்வடையும்வரையில் காத்திருந்தவர்கள் இப்போது அரிசி, முட்டை, தேங்காய் விலை எவ்வளவு என்று கேட்கின்றார்கள்.

நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்தைத் திட்டவில்லை. அவர்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கும் என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசித் தட்டுப்பாட்டால் அநுர அரசுக்கு நெருக்கடி

**கொழும்பு, டிசெ.10**

**அரசாங்கத்தின் நிர்ணய விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது என்று அரிசி மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

அதேவேளை, அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இணங்கமுடியாதுவிட்டால், அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். அதிகரித்த விலைக்கே மொத்த விற்பனையாளர்கள் அரிசியைக் கொள்வனவு செய்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளனர். 5 முதல் 10 ரூபாவுக்கு இடைப்பட்ட இலாபத்தில் அரிசியை விற்பனை செய்யமுடியாது. இந்த நிலைமை தொடருமாயின் அரிசி வர்த்தகத்தைக் கைவிடநேரிடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர். இந்தப் பின்னணியில் நெல் ஆலை உரிமையாளர்களால் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் அரிசிப் பொதித் தொகை மற்றும் சந்தைக்கும் விநியோகிக்கப்படும் அளவு தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளால் பெறப்படும் இந்த அறிக்கை வர்த்தக அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளது. (எ-இ)

## கடவுச்சீட்டு விநியோகத்தை விரைவுபடுத்த நடவடிக்கை

கொழும்பு, டிசெ.10

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், அவற்றை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டை விநியோகிக்கும் நேர எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், புதிய நடைமுறையின் கீழ் வார நாள்களில் இரவு 10 மணிவரை ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர்

கொழும்பு, டிசெ.10

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ். மந்திரிநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ்.மந்திரிநாயக்கவுக்குக் கையளித்துள்ளார். (எ-இ)

## கஜேந்திரகுமார் எம்.பி.யின் வாகனம் விபத்து

கொழும்பு, டிசெ.10

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பயணித்த வாகனம் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் போலவத்த சந்தியில் நடந்துள்ளது. யாசகத்தில் ஈடுபட்ட 70 வயதுப் பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த பெண் வென்னப்புல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். விபத்துச் சம்பவத்தை அடுத்து வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## மின்சாரசபை ஊழியர்களுக்கு இவ்வாண்டு போனஸ் இல்லை!

ஆளும் கட்சியுடன் கூடிய இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்தபோதும், இலங்கை மின்சாரசபையின் பணிப்பாளர் சபை ஊழியர்களுக்கான போனஸை இந்த ஆண்டு அங்கீகரிக்கவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் இந்த ஆண்டு போனஸ் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். தான் அரசாங்கத்துடன் இணைந்த தொழிற்சங்கத்தை வழிநடத்துவதாகவும் எனவே ஊழியர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் கொடுப்பனவு பெற வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தேவையில்லை என்றும் கூறியிருந்தார். ஆயினும் மின்சாரசபையின் பணிப்பாளர் சபை ஊழியர்களுக்கான எந்தவொரு போனஸையும் இந்த ஆண்டு அங்கீகரிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# வாகன இறக்குமதியில் இறுதி முடிவு இல்லை!

கொழும்பு, டிசெ.10

வாகன இறக்குமதி தொடர்பாக அரசாங்கம் உத்தியோகபூர்வமான எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் பிரசாந் மானகே தெரிவித்துள்ளதாவது:-

4 முதல் 5 வருடங்களாக வாகன இறக்குமதி இன்மையால் எமது துறை வீழ்ந்துள்ளது. தற்போது எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்யும் தீர்மானம் அரசாங்கத்திடம் இல்லை. வாகனங்கள் எப்போது இறக்குமதி செய்யப்படும் என்பது தொடர்பாக அரசாங்கம் உறுதியான அறிவிப்பை இதுவரை வெளியிடவில்லை. இந்த ஆண்டு பஸ்கள் மற்றும் லொறிகள் இறக்குமதிக்கும், அதன்பின்னர் ஏனைய வாகனங்களை இரண்டாம், மூன்றாம் கட்டமாக இறக்குமதி செய்ய முடியும் என்று நாம் நம்புகின்றோம்.

இந்தவிடயத்தில் அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும் என்று விரும்புகின்றோம் என்றார். (எ-இ)




**கு**திரைக்கு கொம்பு முளைச்சால் என்ன நடக்குமெண்டதை வில்லுத்தகட்டாரின்ர வில்லங்கங்களைப் பாக்கேக்கையே வடிவாத் தெரியுது. சரஸ்வதி சபதம் எண்ட படத்தில பிச்சையெடுத்துக்கொண்டிருந்த பொம்பிளைக்கு பட்டத்து யானை மாலை போட்டதால ஓவர்நைட்டிலையே மகாராணியாகி, தலைகால் தெரியாமல் ஆடி, கவிண்டு கொட்டுண்டவா. அதைமாதிரி சும்மா டாக்குத்தரா இருந்த வில்லுத்தகடு, தன்ர பேமஸுக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரச்சினையை பேஸ்புக் லைவில விட்டு இப்ப அரும்பொட்டு வாக்கில எம்.பி.யாவும் வந்திட்டார். ஆளுக்கு முன்னப்பின்ன அரசியலைப் பற்றி அறவே தெரியாது. ஒரு எம்.பி.க்கு என்ன அதிகாரம் இருக்கெண்டும் ஆளுக்கு விளக்கமில்லை. 'எங்கும் செல்வோம், எதிலும் வெல்வோம்' எண்டு ஏதோ நிறைவேற்றதிகார எம்.பி. மாதிரித்தான் ஆள் இப்ப நடக்கிறாராம்.

ஆட்டில கடிச்சு, மாட்டில கடிச்சு, மனிசரில கடிக்கிற ஓநாய் மாதிரி சாவகச்சேரியில தொடங்கின வில்லுத்தகட்டாரின்ர வில்லங்க விளையாட்டு மன்னார்ப் பக்கமா போய் கடைசியா இப்ப யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில வந்து நிக்குது. ஆளுக்கு பெரியாஸ்பத்திரிக்காரரை இருத்தி எழுப்போணும் எண்டதுதான் கனநாள் பிளான். ஆனால் முந்தி ஆள் அதுக்க காலடி எடுத்து வைக்கவே ஏலாதெல்லோ. இப்ப தானொரு 'நிறைவேற்று அதிகார எம்.பி.' எண்ட நினைப்பில நேற்று அங்க போய் பணிப்பாளரின்ர ஒப்பீஸுக்க போக வெளிக்கிட்டிட்டார். ஆனால் செக்கியூரிட்டிமார் அவரை உள்ளுக்க விடேலை. உடனேயே அவையின்ர நெஞ்சில கைவைச்சுத் தள்ளிப்போட்டு, விடுவிடெண்டு அப்பிடியே பணிப்பாளரின்ர ஒப்பீஸுக்க போயிருக்கிறார். என்னதான் வில்லுத்தகடு விசுக்கோத்து எண்டாலும் எம்.பியெல்லோ. அதால அவரை இருக்கச் சொல்லி 'என்ன விசயமா வந்தனியள்?' எண்டு கேட்டிருக்கிறார் பணிப்பாளர். ஆனால் விசுக்கோத்து எம்.பி. சன்னதம் ஆடத்தொடங்கிட்டாராம். 'நானொரு கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர். என்னை நீங்கள் சேர் எண்டுதான் கூப்பிடவேணும். அதோட நான் வரேக்க நீங்க இருக்கக் கூடாது. எழும்பி நிண்டுதான் கதைக்கோணும்' எண்டு கனக்க சட்டாம்பித்தனம் கதைச்சிருக்கிறார். 'சேர் எண்டெல்லாம் கூப்பிட ஏலாது. வேணுமெண்டால் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் எண்டு சொல்லுறதில ஆட்சேபனை இல்லை' எண்டு பணிப்பாளர் பக்குவமாச் சொல்லியும், விசுக்கோத்து எம்.பி. விடுறதா இல்லையாம்.

'உங்களைப் பற்றி எனக்கு கனக்க முறைப்பாடுகள் வந்திருக்கு. அதுபற்றி நான் விசாரிக்கோணும்' எண்டு விசுக்கோத்து எம்.பி . சொல்ல பணிப்பாளர் சூடாகிட்டார்.

'அப்பிடி முறைப்பாடு வந்தால் பொலிஸில போய் நடவடிக்கை எடுமன். இஞ்ச ஏன் வந்து டியூட்டியைக் குழப்பிறீர்?' எண்டு அவர் சொல்லியிருக்கிறார்.

'அதுபற்றி நான் விசாரிக்கோணும். அதுக்குத்தான் சில விவரங்கள் உங்களிட்ட எடுக்க வந்தனான். என்னதான் இருந்தாலும் நீங்கள் எனக்கு கீழ உள்ள பணிப்பாளர் தானே' எண்டு தன்னைப்பற்றித்தானே பீத்தியிருக்கிறார் விசுக்கோத்து எம்.பி. பணிப்பாளரும் விடேலை.

'நான் டிப்பார்ட்மெண்டுக்கு கீழதான் வேலை செய்யிறன். எம்.பி.மாருக்கு கீழ வேலை செய்யேலை. என்ன விவரம் எண்டாலும், டிப்பார்ட்மெண்ட் கேட்டால் தான் குடுக்கலாமே தவிர இப்பிடி அனுமதி இல்லாமல் வந்து கேக்கிற உமக்கெல்லாம் தர ஏலாது' எண்டு மறுத்தான் குடுக்க, விசுக்கோத்து எம்.பி. கலைவந்தவை மாதிரி கத்திப்போட்டு போட்டாராம்.

இப்ப பணிப்பாளர் 'அனுமதி இல்லாமல் ஆஸ்பத்திரிக்குள்ள புகுந்து கடமைக்கு இடையூறு' எண்டு விசுக்கோத்து எம்.பி. க்கு எதிரா பொலிஸில முறைப்பாடு போட்டிருக்கிறார். விசுக்கோத்து எம்.பி., பார்லிமெண்ட் போற நாளை விட இனிமேல் கோர்ட்ஸுக்கு போய்வாற நாள் தான் கூடவா இருக்கும் போல.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள

# நடைபாதைக் கடைகளை அகற்றுவதற்கு காலக்கெடு

## வவுனியா நகரசபை நடவடிக்கை

வவுனியா, டிசெ. 10
வவுனியா நகரில் பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று வவுனியா நகரசபைச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இலுப்பையடி, மருத்துவமனை வீதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகளில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருக்கும் நடைபாதைக்கடை உரிமையாளர்களுக்கே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இவை அகற்றப்படவேண்டும் என்றும், அவ்வாறு அகற்றப்படாவிட்டால் அவற்றை அகற்றும் நடவடிக்கைகளை நகரசபை எடுக்கும் என்றும் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், மாகாண உள்ளூராட்சித்திணைக்களம், வவுனியா மாவட்டசெயலாளர், வீதி அபிவிருத்தி ஆகியதிணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (எ-25,110)

# கசிப்புக்காய்ச்சிய ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.10
கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் இளவாலைப் பொலிஸாரால் நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரை மாதகல் பிரதேசத்தில் கைது செய்துள்ளனர். சந்தேகநபரிடம் இருந்து 20 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-125)

# குடிதண்ணீர் விநியோக நடமாடும்சேவை

கிளிநொச்சி, டிசெ.10
பளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிளாலி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் குடிதண்ணீர் விநியோகத்துக்கான நடமாடும் சேவை நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையால் மு.ப. 10 மணி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உத்தியோகத்தர்கள் வீடுகளுக்குச் சென்று குடிதண்ணீர் இணைப்பைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை வழங்கி அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவுள்ளனர். குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி, காணி ஆவணத்தின் நிழற்பிரதி (காணி ஆவணம் இல்லாதவர்கள் நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையால் வழங்கப்படும் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்) ஆகிவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்துக் கையளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-214)

# சடலம் மீட்பு

வவுனியா. டிசெ.10
வவுனியா. கோயில்குளம் சந்திக்கு அருகில் உள்ள கடைத்தொகுதிக்கு முன்பாக நேற்றுக்காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா. கோயில்புதுக்குளத்தைச் சேர்ந்த எம். விஜயரத்தினம் (வயது-63) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-110)



# பயன்தரு மரங்கள் நடும் திட்டம் ஆரம்பம்

வவுனியா, டிசெ.10
வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சம் உள்ளூர் பயன்தரு மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

வவுனியா மாவட்டசெயலகம் , வனப்பாதுகாப்புத் திணைக்களம், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன என்று மாவட்ட செயலாளர் பீ.ஏ. சரத்சந்திர தெரிவித்தார். இலுப்பை, தேக்கு, வேம்பு, கறிவேப்பிலை உள்ளிட்ட பெறுமதிமிக்க செடிகள் மழைக்காலத்தில் இத்திட்டத்தின் கீழ் நடப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா களுகுன்னம்டுவ ஆலயவளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு மாவட்ட செயலாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (எ-110)



# பணி எழில் விழா

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை அதிபர் த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-25-20-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய வேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம் :** தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**தனுசு:** முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தீமை செய்பவர்களால் உலகம் அழிக்கப்படாது, ஆனால் எதையும் செய்யாமல் அதை வேடிக்கை பார்ப்பவர்களால் தான் அழிக்கப்படும்.

- அல்பேர்ட் ஐன்ஸ்டீன் -

# புலிகளும் தடைகளும்!

இந்தியாவின் இறைமைக்கும், அதன் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாகச் செயற்படுவதாகத் தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தடையை நீடிப்பதை உறுதிசெய்திருக்கிறது இந்திய மத்திய அரசாங்கத்தின் தீர்ப்பாயம்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், பல நாடுகள் புலிகள் மீதான தடையை மறுபரிசீலனை செய்திருக்கின்றன. சில நாடுகள் தடையைக் கைவிட்டிருக்கின்றன. இன்னும் சில நாடுகள் தளர்வுப்போக்கைக் கடைப்பிடிக்கின்றன. ஆனால், இந்திய அரசாங்கமோ எந்தவித விட்டுக் கொடுப்பும் இல்லாமல் புலிகள் மீதான தடையை தொடர்ந்தும் இறுக்கமாகவே நடைமுறைப்படுத்தி வருகின்றது. புலிகள் அமைப்பு முழு வீச்சுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தால்,எப்படி இந்திய அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்ததோ அதேபோன்றே தற்போதும் இந்த விவகாரத்தைக் கையாள்கின்றது இந்தியா. இதன் தொடர்ச்சியாகவே 'புலிகளின் ஆயுதமௌனிப்பின்' பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒருமுறை தடை தூசுதட்டப்பட்டு, மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது. 'விடுதலைப் புலிகளின் இயக்கம் இரகசியமாகச் செயற்படுகிறது, தனிநாடு என்ற கோரிக்கையில் புலிகள் அமைப்புத் தொடர்ந்தும் வலுவாகவே உள்ளது, இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது, இந்தியாவின் பாதுகாப்புக்கு அந்த அமைப்பு அச்சுறுத்தலாகவே உள்ளது 'என்பனதான் புலிகள் மீதான தடை நீடிப்புக்கு இந்தியா கூறும் காரணங்கள். இலங்கையில் வடக்கு - கிழக்கு இணைந்த பகுதிகளைத்தான் தங்களின் தாயகமாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். அவர்கள் ஒருபோதும் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கோ, இறையாண்மைக்கோ, பிராந்திய நலன்களுக்கோ எதிராகச் செயற்பட்டதில்லை. தவிர, இந்தியாவின் பகை நாடுகளுடன் எந்த வகையான உறவையும் விடுதலைப் புலிகள் வைத்துக்கொண்டதுமில்லை. இது இந்தியாவுக்கும் நன்கு தெரியும்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கையின் எல்லைக்குள் - இந்தியாவுக்கு நெருக்கமாக பயணித்ததாக அறிந்ததுண்டா? பாகிஸ்தானினதும், சீனாவினதும் இராணுவக் கூட்டணி மாலைதீவுக் கடற்பரப்பை மையப்படுத்தி நகர்ந்ததாகக் கேட்டதுண் டா? இங்கே காக்கப்பட்டவை புலிகளின் நலன்கள் மட்டுமல்ல, மாறாக இந்திய நலன்களும் அதன் இறையாண்மையும்தான். அதனால்தான், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக வைகோ, சீமான் போன்ற தமிழகத் தலைவர்கள் கொந்தளித்திருக்கின்றனர்.

இன்று விடுதலைப் புலிகள் இல்லை. புலிகள் மீது ஏகப்பட்ட தடைகள் தொடர்கின்றன. மீண்டெழ முடியாத அளவுக்குப் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், புலிகள் இல்லாத இன்றைய இலங்கையின் நகர்வால் இந்தியா திருப்திப்பட்டுவிடமுடியுமா? சீனா மிகச் சாதாரணமாக நடமாடுகின்றது, அணிசேராக் கொள்கை என்ற பெயரில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் கண்களுக்குள் விரல்விட்டு ஆட்டிக்கொண்டிருக்கின்றது இலங்கை. ஆதலால், புலிகள் மீதான தடைக்கு முன்னர் இந்தப் புரிதல்களை பாரதம் தன்னுள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். காலிஸ்தான் விடயத்தில் சில கணக்குகளைக் காட்டுவதற்காக புலிகள் மீதான தடை இந்தியாவுக்குத் தேவைப்படலாம். அதுவேறு கதை. ஆனால் அதற்காக புலிகளுக்கு தடை விதிப்பதாக நினைத்து, சீனாவின் பட்டுப்பாதை திட்டம் வெற்றிகரமாக தங்குதடையில்லாமல் நடக்க இந்தியாவே களமமைத்துக் கொடுப்பதுதான் ஆகப்பெரிய வேடிக்கை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# உள்ளூராட்சித் தேர்தலுக்காக 72 கோடி ரூபா வீணடிப்பு!

கொழும்பு, டிசெ.10

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இதுவரையில் 72 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை எதுவித பயனுமின்றி விரயமாக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

பல செயற்பாடுகள் பழைய வேட்புமனுக்களின் படி மேற்கொள்ளப்பட்டன. அதற்காக அச்சிடப்பட்ட உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகள் எவற்றையும், மீள வேட்புமனுக்கள் கோரும்போது பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு மீள வேட்புமனுக்களை கோரும் சந்தர்ப்பத்தில் இதுவரையில் மேற்கொண்ட செலவுகள் பயனற்றுப்போகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தபால்மூல வாக்குகள் வரையிலான செயற்பாடுகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில் வேட்புமனுக்களை மீளக் கோரும்போது அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# நவம்பர் மாதத்தில் 1,84,158 சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ.10

இந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 158 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18 லட்சத்து 4 ஆயிரத்து 873 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது . (எ-இ)

# காற்று மாசு அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ.10

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரச்சுட்டெண் ஆரோக்கியமற்ற மட்டத்தில் நீடிக்கலாம் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வுப் பிரிவு அறிவித்திருந்தது. யாழ்ப்பாணம், பொலநறுவை ஆகிய நகரங்களில் இந் நிலை ஏற்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டிருந்தது. (எ-இ)

# கடற்படையினருக்கு பதவி உயர்வு

கொழும்பு, டிசெ.10

இலங்கைக் கடற்படையின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடற்படையைச் சேர்ந்த 2 ஆயிரத்து 138 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரைக்கு அமைய இந்தப் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# மரக்கறி விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ். குடாநாட்டில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சந்தையில் கத்தரிக்காய் கிலோ 500 ரூபா, பயிற்றங்காய் கிலோ 800 ரூபா, பாகற்காய் கிலோ ஆயிரத்து 200 ரூபா, தக்காளிப்பழம் கிலோ 400 ரூபா, பச்சை மிளகாய் கிலோ ஆயிரம் ரூபா, வெண்டிக்காய் கிலோ 300 ரூபா, போஞ்சி கிலோ 800 ரூபா, கீரை ஒரு பிடி 150 ரூபாவாகவும் விற்கப்பட்டன. (எ-45-17)


நாளை
புதன்கிழமை - கார்த்திகை - 26
11.12.2024
சுபநேரம் : 04.49 - 06.19
ராகுகாலம் : 12.19 - 01.49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்தம்

# 200 மில்லியன் தேங்காய்கள் விலங்குகளால் சேதமடைகின்றன





கொழும்பு, டிசெ. 10

**நாட்டில் விலங்குகளால் வருடாந்தம் 200 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்கள் இழக்கப்படுவதாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சமன் தேவகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆண்டுதோறும் தேங்காய் நுகர்வு 1800 மில்லியனாகக் காணப்படுகிறது. ஒருவர் வருடமொன்றுக்கு சராசரியாக 105 தேங்காய்களை உணவுக்காக பெற்றுக்கொள்கிறார். உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்காக எதிர்பார்க்கப்படும் வருடாந்த தேங்காய் அறுவடை 3 பில்லியனாகும். ஆனால், இந்த ஆண்டு தென்னை அறுவடை சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளது. தென்னை உற்பத்தி குறைவதற்கான பிரதான காரணங்களாக விலங்குகள் சேதம், காலநிலை மாற்றம், பூச்சி சேதம் மற்றும் உரங்களின் பயன்பாடு குறைவு உள்ளிட்டவை தாக்கம் செலுத்துகின்றன.

இவற்றில் குரங்குகள், அணில், வண்டுகள் போன்ற விலங்குகளால் தென்னந்தோப்புக்கு அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. சிவப்பு வண்டு, கறுப்பு வண்டு மற்றும் வெள்ளை ஈ சேதம் மற்றும் பூச்சி சேதம் தென்னைத் தோட்டங்களின் உற்பத்தித்திறனை 10% முதல் 15% வரை பாதித்துள்ளன.

இதனால் வருடாந்தம் 200 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்கள் இழக்கப்படுகிறது - என்றார். (ச-இ)

வவுனியாவில்

## டெங்கு களச்சோதனை சிக்கின குடியிருப்புகள்

வவுனியா, டிசெ.10

கடந்த சில நாள்களாக பெய்த மழையின் காரணமாக டெங்கு நோய்த்தாக்கம் வவுனியாவில் அதிகரித்துவரும் நிலையில் வவுனியா நகரப் பகுதியிலுள்ள வர்த்தகநிலையங்கள், வீடுகள், கல்வி நிலையங்கள என்பன வவுனியா பொலிஸாரால் நேற்று திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது டெங்கு நுளம்புக் குடம்பிகளுடன் டெங்கு பரவும் ஏதுநிலை காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸாரால் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. அத்துடன் நுளம்புகள் பெருகாத வண்ணம் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினர். (ச-33-18)



மக்களுடன்

## ரவிகரன் எம்.பி. குறைகேள் சந்திப்பு

மன்னார், டிசெ.10

மாந்தை கிழக்குப் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தினார்.

சந்திப்பின்போது சிராட்டிகுளம் கிராமத்துக்குச்செல்லும் பிரதான வீதிச்சீரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல், யானைவேலி அமைத்தல், தாழ்நிலப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொதுப் போக்குவரத்துப் பிரச்சினை, வனவளத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் மக்களால் அவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. (ச-45)

## கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.10

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேப் போட்டியில் பதக்கம் வென்ற விஜயராஜ் தமிழ்நிலவனைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதியின் உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தேசிய கராத்தே சங்கத்தின் பிரதிநிதிகள், மாவட்டப் பயிற்றுநர்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (ச-45-113)






பருத்தித்துறையில்

# வெங்காய நடுகைக்கு தயாராகும் விவசாயிகள்!

யாழ்ப்பாணம், டிசெ.10

பெரும்போகத்தை முன்னிட்டு வெங்காய நடுகையை மேற்கொள்ள பருத்தித்துறை விவசாயிகள் முன்னாயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக பெரும்போகச் செய்கை தாமதமாகி வரும் நிலையில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக பல இடங்களில் வெள்ள நீர் வடிந்தோடாதுள்ளது.

இந்தநிலையில் பருத்தித்துறை பிரதேசத்துக்குட்பட்ட தம்பசிட்டி, சுப்பர்மடம், வியாபாரிமூலை, இன்பர்சிட்டி உள்ளிட்ட பகுதிகளில் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பசளைகளையிட்டு வயல் நிலங்களை உழுது பண்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (நி-100)






பீபோர்ட் இன்ரர்நஷனல் ஆங்கிலமொழி மூல ஆரம்பப்பாடசாலைச் சிறார்களின் கலைவிழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொழில்முயற்சியாளருக்கு இருநாள்கள் பயிற்சிநெறி!

சிறு நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பொதியிடல் மற்றும் நிதிக் கையாளுகை தொடர்பான இரண்டு நாள்கள் பயிற்சி கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி நெறியில் வட மாகாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிராந்திய முகாமையாளர், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-22-66-9)

**வேலைக்கு ஆட்கள் தேவை**
இருபாலையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அலுவலகம் ஒன்றிற்கு ஆண், பெண் கணினி அறிவு உள்ள உத்தியோகத்தர்கள் தேவை
தொடர்புகளுக்கு:
whatsapp: 076 050 3863
Telephone: 076 311 9485



## நயினாதீவு மருத்துவமனைக்கு ஸ்கான் இயந்திரம் நன்கொடை

யாழ்ப்பாணம், டிசெ.10
நயினாதீவுப் பிரதேச மருத்துவமனைக்கு புதிய ஆல்ட்ரா சவுண்டு ஸ்கானிங் இயந்திரம் நன்கொடையாக கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி வி.பி.எஸ். டி.பத்திரண, யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-66)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் 2025

எமது சபையினால் 2025 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தங்களை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சிமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்,உராய்வு நீக்கி
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள் ,சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள்,கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

மேற்படி விண்ணப்பமானது ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் Pachchilaipalli.ps.gov.lk இணையத் தளத்திலும் மற்றும் தலைமையலுவலக முகப்பு அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் குறித்த சேவைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பபடிவக் கட்டணமாக ரூபா.1000.00 உம் ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்குமான பதிவுக் கட்டணமாக ரூபா.1000.00 (வரிகள் நீங்கலாக ) செலுத்தப்படல் வேண்டும்.
விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2025" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்படிவங்கள் 31.01.2025 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் மேலதிக விபரங்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 024-3243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

(CR/43861) J-1



## உதவிப்பொருள்கள் வழங்கி வைப்பு

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில், கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வசிக்கும் தெரிவுசெய்யப்பட்ட பெண்களுக்கான அவசர உதவிப் பொருள்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் வட மாகாண இணைப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-25-113)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஜப்பான் உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென ஜப்பானிய அரசு 300 மில்லியன் பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளது. இந்த நிவாரணப்பொருள்கள் கடந்த சனிக்கிழமை விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவை பிரதேச செயலகங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தியத் தூதரகமும் துணுக்காய், பேசாலை, வெள்ளாங்குளம், மாந்தை போன்ற பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளது. (எ-25,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

இலண்டனில் வசிக்கும் 60 வயதுடைய சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு O அல்லது B இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
நிறுநீரகம் வழங்க விரும்புபவர்கள் இலண்டன் வரவேண்டும்.
அதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.

+44 7308 606126, 076 349 1483, 074 116 4756

(CS/56869) J-1


# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ். மாநகரப் பிரதேசத்தில் தேசிய டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு டெங்குத் தொற்று அதிக முள்ள பகுதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் - ஜே/68, ஜே/69 கிராம சேவகர் பிரிவுகளிலும், நாளை புதன்கிழமை யாழ்நகர் 2இல் ஜே/73, ஜே/74 கிராம சேவகர் பிரிவுகளிலும், நாளை மறுதி னம் வியாழக்கிழமை யாழ்நகர் 2 இல் ஜே/75, ஜே/76 கிராமசேவகர் பிரிவுகளிலும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்நகர் 1 இல் ஜே/79 கிராமசே வகர் பிரிவிலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படவுள்ளன என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

(எ-ரி-17)


## வரவு செலவுத்திட்டம் 2025
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 10.12.2024 திகதி தொடக்கம் 16.12.2024 ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை பொதுநூலகங்களிலும் சனசமூக நிலையங்களிலும் மற்றும் பிரதேசசபை முகநூல் பக்கத்திலும் இணையத் தளத்திலும் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகிறேன்.

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(CR43859) J-1


# உள்ளூராட்சித் தேர்தலில் வீரவன்ஸவின் கூட்டணி!



கொழும்பு, டிசெ.10

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் களமிறங்குவதற்காக விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி யின் தலைமையின்கீழ் தேசப்பற்று கூட்டணி யொன்று உருவாக்கப்ப டும் என்று முன்னணியின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார். உள்ளாட்சிச பைத் தேர்தலுக்கான தேசிய சுதந்திர முன்னணியின் ஏற்பாடு பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்த தாவது:-

உள்ளாட்சிசபைத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தலைமையிலான கூட்டணியில் போட்டியிடுவோம். அதற் கான பட்டியல் தயாரிக்கப்பட்டுவருகின் றது. விலைபோகாத தரப்புகளை உள்ள டக்கிய தேசியப்பற்றுள்ள கூட்டணியாகச் செயற்படுவோம். அதேவேளை மாகா ணசபைத் தேர்தலிலும் போட்டியிடு வோம் - என்றார். (எ-44)


## மாந்தை கிழக்கு பிரதேச சபை

பிரதேசசபை கடைத்தொகுதிகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கொல்லவிளாங்குளம் சந்தைப் பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை 06.01.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம் | : 10.12.2024 – 24.12.2024 பி.ப 12.00 மணி வரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | : 24.12.2024 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப் படிவம் திறக்கப்படும் திகதி | : 24.12.2024 பி.ப 2.00 மணிவரை |
| கேள்வி திறக்கப்படும் இடம் | : மாந்தை கிழக்கு பிரதேச சபைகுத்தகைக்கு வழங்கப்படவுள்ள கடைகள் விபரம் |

**குத்தகைக்கு வழங்கப்படவுள்ள கடைகள் விபரம்:**

| கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புபணம் ரூபா | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1 | 720,000.00 | 2,000.00 | 10,800.00 | 3,000.00 |
| 2 | 720,000.00 | 2,000.00 | 10,800.00 | 3,000.00 |
| 3 | 720,000.00 | 2,000.00 | 10,800.00 | 3,000.00 |
| பாலிநகர் கடைத்தொகுதி | | | | |
| 3 | 660,000.00 | 2,000.00 | 9,900.00 | 2,750.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாந்தை கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பம் பெறவரும் போது தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு மற்றும் அதன் பிரதியுடன் வரவேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 24.12.2024 திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேச சபையின் அறை வாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. குறித்த கடையின் ஒப்பந்த காரர்கள் எந்த வகையிலும் உப வடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்டகால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் அபாயகரமான தொழில்கள் ஆகிய தொழில்களை மேற்கொள்ள முடியாது.
8. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று மாதகால வாடகைப்பணத்தை பாதுகாப்பு வைப்பாக ஒருவார காலத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் சபையுடன் ஓர் ஒப்பந்தமும் செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாக கருதி அடுத்த கேள்விதாரருக்கு குறித்த நிலையம் வழங்கப்படும்
9. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை, மாந்தை கிழக்கு.**

(cr.43858) (N-1)


# தேசியப்பட்டியல் சிக்கல் தீர்க்கப்பட்டு விட்டதாம்!

## அஜித் பெரேரா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.10

தேசியப் பட்டியல் பிரச்சி னைக்குத் தீர்வு எட்டப்பட் டுள்ளது . அது தொடர் பான பெயர் விவரங் களை கட்சித் தலைவர் விரைவில் வெளியிடு வார் என ஐக் கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித் துள்ளார். ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக் கப்பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆச னங்களில் நான்கு ஆசனங்களுக்குரிய உறுப்பினர்களின் பெயர்கள் இன்னும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப் பிவைக்கப்படவில்லை. தேசியப் பட்டியல் வாய்ப்பை தோல்வி அடைந்த உறுப்பி னர்களும், பங்காளிக்கட்சி உறுப்பினர் களும் கோருவதால் ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் கடும் நெருக்கடி ஏற்பட்டி ருந்தது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த அஜித் பி பெரேரா, 'பிரச்சினை தீர்ந்து விட்டது, பெயர் விவரத்தை மட்டுமே அறி விக்க வேண்டியுள்ளது. அதனை கட்சித் தலைவர் அறிவிப்பார்" என்று தெரிவித் தார்.

அதேவேளை உள்ளாட்சிசபைத் தேர்த லில் ஐக்கிய மக்கள் சக்திக்கு சாதகமான பெறுபேறு கிட்டும் எனவும் அவர் நம் பிக்கை வெளியிட்டார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆள்கடத்தல் மூலம் பிரிட்டன் செல்வது ஒருபோதும் சாத்தியமில்லாத விடயம்!

## இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் திட்டவட்டம்

**கொழும்பு, டிசெ.10**

**ஆள்கடத்தலுக்கு நமது சமூகத்தில் இடமில்லை, இந்தப் பயங்கரமான வர்த்தகம் ஒருபோதும் பலனளிக்காது என்பதை உறுதிப்படுத்துவோம் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரிட்டன் உட்படப் பல அரசாங்கங்கள், உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு துயரத்தை ஏற்படுத்தும் ஆள்கடத்தல் எனும் கொடூரத்தை எதிர்கொள்வதில் கவனத்தை குவித்துள்ளன. அதிகமான மக்கள் குற்றவாளிகளுக்கு பெருந்தொகை பணத்தைச் செலுத்துகிறார்கள், பின்னர் சுரண்டப்படுகிறார்கள் நவீன அடிமைத்தனத்துக்குள் தள்ளப்படுகிறார்கள், அல்லது ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதன் மூலம் துரதிர்ஷ்டவசமாக தங்கள் வாழ்வை இழக்கிறார்கள்.

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு கவுன்ஸிலில் வெளியுறவு அமைச்சர் ஹேரத் அண்மையில் தெரிவித்த கருத்துகளை நான் வரவேற்கிறேன். அங்கு அவர் 'பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் வழக்கமான இடம்பெயர்வுப் பாதைகளை' மேம்படுத்துவதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார், இந்தக் கடினமான பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார்.

யாரும் ஏமாறக்கூடாது - ஆள்கடத்தல்காரர் என்ன சொன்னாலும் டியாகோ கார்சியா பிரிட்டனுக்குச் செல்லும் பாதை அல்ல. அனைத்துக்கும் மேலாக டியாகோ கார்சியா ஓர் இராணுவத் தளமாகும், எனவே புலம்பெயர்ந்தோருக்கு பொருத்தமான இடமாக ஒருபோதும் அது இருந்ததில்லை. எந்தவொரு புலம்பெயர்ந்தவர்களும் எதிர்காலத்தில் தீவுகளுக்கு மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டால், அவர்கள் இலங்கையில் இருந்து 10 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் தெற்கு அட்லாண்டிக்கில் உள்ள தொலைதூர தீவான செயின்ட் ஹெலினாவுக்கு மாற்றப்படுவார்கள். அவர்கள் செயின்ட் ஹெலினா அரசாங்கத்தின் பொறுப்பின் கீழ் வருவதுடன் ஒருபோதும் இங்கிலாந்துக்கு மாற்றப்படமாட்டார்கள். சந்தேகத்துக்குரிய கடத்தல்காரர்களைக் கண்டறியவும், அவர்களின் வங்கிக் கணக்குகளை முடக்கவும், சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை வேலைக்கு அமர்த்தும் தொழில் வழங்குநர்களுக்கு தடை விதிக்கவும், பிரிட்டனில் இருக்க உரிமை இல்லாதவர்களை அங்கிருந்து வெளியேற்ற விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஐக்கிய இராச்சிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆள்கடத்தல்காரர்கள் பணத்தைப் பெறுவதில் குறியாக இருப்பார்களே தவிர, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு என்ன நடக்கிறது என்பதைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களின் இந்த வணிக மாதிரிகளை அகற்றி அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்.

சிறந்த வாழ்க்கையை அடைய வேண்டும் என்ற விருப்பமே இடம்பெயர்வுக்கான முதன்மையான உந்துதலாக இருப்பதையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம், அதனால்தான் மக்களின் இந்த நோக்கத்தை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நாங்கள் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம். 2023 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் பவுண் பெறுமதியான இலங்கைப் பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ததன் மூலம் ஐக்கிய இராச்சியம் இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக விளங்குகிறது. இலங்கையில் உழைக்கும் மக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. இலங்கையில் பொருளாதார வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் எமது இரு நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் வளமானதாகவும் மாற்றுவோம். நிச்சயமாக பல இலங்கையர்கள் பிரிட்டனுக்கு பார்வையாளர்களாகவும் கல்வி கற்கவும் வேலை செய்யவும் வருகிறார்கள், ஆனால் அவர்கள் அவற்றை விசா வழிமுறைகள் ஊடாக பாதுகாப்பாகவும் சட்டபூர்வமாகவும் மேற்கொள்கிறார்கள்.

கொழும்பில் இருந்து லண்டன் வரை ஆட்கடத்தலுக்கு நமது சமூகத்தில் இடமில்லை, இந்தப் பயங்கரமான வர்த்தகம் ஒருபோதும் பலனளிக்காது என்பதை உறுதிப்படுத்துவோம் என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
27 . 02 . 1948



விண்ணில்
09 . 12 . 2024

## குமாரசாமி பூபதி

கோப்பாயை பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பூபதி அவர்கள் நேற்று (09.12.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம்-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம்மாவின் அன்பு மருமகளும் குமாரசாமியின் பாசமிகு மனைவியும் கலாநிதி(நெதர்லாந்து), ராஜநிதி (நெதர்லாந்து), குணசேகரம் (சேகர்-சோலை அம்மன் ஹாட்வெயர் உரிமையாளர் மீசாலை) குலசிங்கம் (கிருபா), சிவகுமாரன் (ராசன்-கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கப்பணியாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவலோஜன், கோகுலவாசன், ஜெயசோதி, பவாணி, தயாளினி ஆகியோரின் மாமியாரும் கரன்-சுவர்ணா, சாதுஜன், அபிராமி, துவாரகா, கிதுர்சன் கலைவாணி, எதுர்சன், பிரியோசன்-கீர்த்திகா, ஜதுசன், சுரோஜிதா, கேதாரன் ஆகியோரின் பேத்தியும் இஷானா, இனிஷா, ஷயன், மகிஷா, யுகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகன கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**77 360 9492, 077 630 7148**

(CS 2012) V-1

# மரண அறிவித்தல்



## சுந்தரம் யோகீஸ்வரன் (சாமியார்)

**(இளைப்பாறிய யாழ் ஐக்கிய வியாபார சங்க உத்தியோகத்தர்)**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், 125 கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் யோகீஸ்வரன் அவர்கள் நேற்று (09.12.2024) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-கண்மணி தம்பதியின் அன்பு மகனும் செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-பார்வதி தம்பதியின் மருமகனும் வசந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும் டயானி (சிந்து), மயூரி, டர்மினி அவர்களின் பாசமிகு தந்தையாரும் செந்துராஜ், குருபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷஸ்டிகா, கிருஷ்டிகா, ஆதிரை, அதீதன் ஆகியோரது அன்புப் பேரனும் சரோஜினிதேவி (சுவிஸ்), நல்லைநாதன், ஜெயலட்சுமி (மலர்), மகேந்திரன் (கனடா), பவானி அம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.125, கலாசாலை வீதி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 221 2817**

(CS 2009) V-1

# மரண அறிவித்தல்



## நீக்கிலாப்பிள்ளை பிரான்சிஸ்

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பிரான்சிஸ் அவர்கள் நேற்றுமுன்தினம் (2024.12.08) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை-திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிலுப்பையா-லில்லியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திரேசா (மனோன்) அவர்களின் அன்புக் கணவரும் சுகந்தினி (பாமா) (நோர்வே), எமில் சுதாகரன் (பவன்), காலஞ்சென்ற எமில்டா வினோதினி (பவி), எமிலா சுவேந்தினி (பாலா), எமில் சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ராஜேஸ்வரன் (நோர்வே), அனற் மேசி, நியூமன், ஜெயயாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவரான சுவாம்பிள்ளையின் அன்புச் சகோதரனும் எலிசபெத்தின் அன்பு மைத்துனனும் அஸ்வினி (நோர்வே), அஸ்வின் (நோர்வே), அருஷா (நோர்வே), அனோஜன், அபினாஷ், நிஜிதா, நிக்சிகா, நிதுஜா, மிரோசன், கார்மேலிசன், ஜெமில்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது இறுதி நல்லடக்கத்திற்காக இன்று (2024.12.10) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, இறுதி ஆராதனையின் பின்னர் அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 2007) V-1

# மரண அறிவித்தல்



## அமரர் இராசமணி கந்தசாமி

யாழ். கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, சுவிஸ் Andwil SG ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கந்தசாமி அவர்கள் 05-12-2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தப்பு-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவக்கொழுந்து-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (யாழ்ப்பாணம், ராகம, மட்டக்களப்பு வைத்தியசாலை பிரதான எழுது வினைஞர்) அவர்களின் ஆசை மனைவியும், மனோகரன் (சுவிஸ்), டுசியாந்தன் (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரேமகுமாரன் (சுவிஸ்) அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான பூதத்தம்பி, அன்னலட்சுமி, இராசரத்தினம், துரைசிங்கம் மற்றும் காசிப்பிள்ளை (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,

வினோஜிதன்- Ozlem, சஜீவன்- Jeny, கோபி, மெலனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், Devin, Zayn, Yara, Nayla, Mira ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை சுவிற்சர்லாந்து St.Gallen மாநிலத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

| | |
|---|---|
| மனோகரன்-மகன் | - +94 76 287 8655 |
| டுசியாந்தன்-மகன் | - +41 79 222 6654 |
| தயாநிதி-மகள் | - +41 76 428 9821 |
| வீடு-குடும்பத்தினர் | - +41 71 385 9821 |
| பிரேமகுமாரன்-மருமகன் | - +41 79 590 6980 |

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 2008) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டெங்குத் தொற்று



கொழும்பு, டிசெ.10
நாட்டில் தற்போது டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், டிசெம்பர் மாத முதல் வாரத்தில் 858 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 46 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 89 தொற்றாளர்களும், மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 974 தொற்றாளர்களும், சப்ரகமுவ மாகாணம், கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 623 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
அதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 23 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (ஏ-இ)

## வடக்கை...

வரணியைச் சேர்ந்த 60 வயதுடைய நபர் ஒருவர், மூன்று நாள்கள் தொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், மந்திகை மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.
அவருக்கு ஏற்பட்டிருந்த நோய் நிலைமை சடுதியாகத் தீவிரமடைந்தே உயிரிழந்தார் என்று தெரியவருகின்றது.
இறப்புக்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்படாத நிலையில், மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவரின் சுவாசத் தொகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அவருக்கு உண்ணிக் காய்ச்சல் அல்லது எலிக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகின்றது. எனினும், எவ்வாறான நோயால் அவர் உயிரிழந்தார் என்பது கொழும்பில் இருந்து பரிசோதனை அறிக்கைகள் கிடைத்த பின்னரே உறுதிப்படுத்த முடியும் என்று சுகாதாரத்துறையினர் கூறியுள்ளனர்.
இதேவேளை, மேற்படி திடீர் காய்ச்சல் மற்றும் சடுதியான நோய் நிலை காரணமாக இன்னொருவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.
அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே, பொதுமக்கள் தமது சுகாதாரம், குடிதண்ணீர் ஆரோக்கியம் என்பவற்றில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நேற்றுமுன்தினம் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மின்சாரக்...

தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர். ஆனால், தற்போது மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் அவர்களிடம் எந்தத் திட்டங்களும் இல்லை. கடந்த அரசாங்கங்களைப் போல பொய்களைக் கூறியே இவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். எனவே இவர்களின் கருத்துகளைக் கேட்கவும், நம்பவும் நாங்கள் தயாரில்லை.
தற்போதுள்ள கட்டண முறைமையை அடுத்த ஆறு மாதங்களுக்கு நீடிக்கவுள்ளதாக மின்சாரசபை அறிவித்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் மின்கட்டணத்தைக் குறைக்கத் தயார் என்றும் 6 தொடக்கம் 11 வீதம் வரையில் மின்கட்டணக் குறைப்பை நடைமுறைப்படுத்தலாம் என்றும் கூறிய மின்சாரசபை, தற்போது கட்டணக் குறைப்புக்குச் சாத்தியம் இல்லை என்கின்றது. அப்படியென்றால், ஒரு மாதத்துக்குள் அவர்களுக்கு நட்டம் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா? என்று கேட்க விரும்புகின்றோம்.
தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்தை 30 வீதம் குறைக்க வேண்டும். இல்லையேல் மக்களைத் திரட்டி போராட்டங்களை மேற்கொள்வோம். அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராக நீதிமன்றத்தையும் நாடுவோம் - என்றுள்ளது. (அ-ம-6)

## வடக்கு...

போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடியும் அவர்களுக்கு நீதிகோரியும் கடந்த பல வருடங்களாக அவர்களின் உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே, இன்றைய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
திருகோணமலையில் மத்திய பேருந்துத் தரிப்பிடத்திலும், அம்பாறையில் தம்பிலுவில் மத்திய சந்தையிலிருந்து திருக்கோவில் வரையும், மட்டக்களப்பில் தந்தை செல்வா சிலைப்பகுதியிலிருந்து காந்தி பூங்கா வரையிலும், வவுனியாவில் பேருந்து நிலையத்திலும், முல்லைத்தீவில் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனம் முன்பாகவும், கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அலுவலகம் ஆகியவற்றுக்கு முன்பாகவும், மன்னார் பேருந்து நிலையத்திலும் இன்றையதினம் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெறவுள்ளன.
இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, தமது கோரிக்கைகளுக்குப் பலம் சேர்க்குமாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-7)

## வெளிநாட்டு...

மாவட்டங்களைச் சேர்ந்த 16 பேரிடம்

அவர் இவ்வாறு மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை அவரால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-18-110)

## தண்ணிமுறிப்பு,...

பின்னர் மேலும் தெரிவித்ததாவது:- 1984ஆம் ஆண்டு ஆண்டான்குளம் மற்றும்தண்ணிமுறிப்பில்பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்து 40 வருடங்களாகியுள்ள போதிலும் இதுவரை அவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அந்தப் பகுதிகளில் மக்களை விரைவாக மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.
தொல்லியல் திணைக்களத்தின் இடையூறால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குருந்தூர்க் குளத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் அவதானம் செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தீயில்...

சங்கரன் தோட்டம் கரணவாய் தெற்கைச் சேர்ந்த சிவகுரு சிவபூங்கா (வயது-48) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
திருமணமாகாத அவர் இரண்டு சகோதரிகளுடன் வசித்துவந்த நிலையிலேயே, வீட்டுக்கு அருகிலுள்ள பனங்காணி ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-100)

## இழப்பீடுகளுக்கு...

இதையடுத்தே, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கான இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு கமத்தொழில் காப்புறுதிச்சபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
முற்றாகச் சேதமடைந்த வயல் நிலங்களுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு லட்சம் ரூபா வரையில் இழப்பீடாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ-ம-6)

## அர்ச்சுனா...

தும் வகையில் நடந்துகொண்டார் என அர்ச்சுனா எம்.பி. மீது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தியால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## 10,000 தொன்...

வருகை தந்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.
இலங்கையில் தற்போது நிலவும் அரிசிக்கான பற்றாக்குறையைத் தொடர்ந்து, அரிசியை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகள் ஜனாதிபதி அநுரவால் நீக்கப்பட்டுள்ளன. இதன்படி இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பலொன்று வருகைதந்துள்ளது. (அ-ம-இ)

## பொதுத்தேர்தல்...

கிடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.
அந்த வகைகளில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 14 அரசியற் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்கள் என 34 தரப்புகளைச் சேர்ந்த 306 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர். சிலர் தமது கணக்கு அறிக்கையைத் தபாலில் அனுப்பி வைத்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.
வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 23 அரசியற் கட்சிகள், 25 சுயேச்சைக் குழுக்கள் என 48 தரப்புகளைச் சேர்ந்த 432 பேர் தேர்தலில் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூதாட்டியின் இறப்பில் சந்தேகம் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

கோப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் உயிரிழந்த மூதாட்டியொருவரின் இறப்பில் சந்தேகம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

90 வயதுடைய அந்த மூதாட்டி அவரது மகனால் பரா மரிக்கப்பட்டு வந்த நிலையில், தலையில் காயங்களு டன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். பின்பக்கமாக தவறி வீழ்ந்ததால் தான் இறப்பு சம்பவித்ததாக மரண விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அந்த மூதாட்டி தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டி ருக்கலாம் என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலின் அடிப்படையில் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டுள்ளது. இதன்போது தலையில் காயங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அடிகாயங்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சடலத்தை தகனம் செய்யக் கூடாது என நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டதோடு, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ம-125)

# மடிச்சுக்கட்டி தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10

வலி. கிழக்குப் பிரதேச வயல்களில் ஏற்பட்ட மடிச் சுக்கட்டி நோயால் நெற்பயிர்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

நீர்வேலி, கோப்பாய் தரவை வயல்களில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் நோயைக் கட்டுப்படுத்துவ தற்காக மருந்து விசிறும் பணியில் ஈடுபட்டு வருகின் றனர். (எ-45-17)

# புனித வெற்றி நாயகி ஆலயத் திருவிழா

மன்னார், டிசெ.10

மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத் திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்றது.

நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், கடந்த சனிக்கிழமை வேஸ்பர் ஆராதனையும், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (எ-ரி-56)

வேலையாள் தேவை

வெதுப்பக வேலையாள் தேவை. உடனடியாக தொடர்புகொள்ளவும்.

074 001 5060

(CS6871) N-1

# காற்றுச் சுழற்சி நாளையதினம் யாழ்ப்பாணத்தை அண்மிக்கும்!

வங்களா விரிகுடாவில் ஏற்பட் டுள்ள காற்றுச் சுழற்சி நாளை யாழ்ப்பாணத்தை அண்மிக்கும் என்று வானியல் அவதானிப்பா ளர்கள் கணித்துள்ளனர்.

நேற்றுமாலை திருகோணம லைக்கு தென்கிழக்காக 600 கிலோமீற்றர் தொலைவில் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்தபடி நலிந்த காற்றுச்சுழற் சியாகவே அது நீடித்து வந்தது. இந்தக் காற்றுச் சுழற்சி அதே திசையில் பயணித்தால் நாளை யாழ்ப்பாணத்தை அண்மிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. காற்றுச் சுழற்சி வடக்கை அண் மிக்கும்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உள் ளிட்ட பகுதிகளில் 50 மில்லிமீற் றர் வரையான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-இ)

மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 04 . 1957



மறைவு
09 . 12 . 2024

திருமதி விமலாதேவி யோகேந்திரன்

புலோப்பளை பளையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி யோகேந்திரன் (09.12.2024) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை (முன்னாள் கிராம விதானையார் பளை) இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புப்பு தல்வியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோகேந்திரன் (முன்னாள் கிராமசேவையாளர் திருவையாறு) அவர்களின் அன்பு மனைவியும் சிந்துஜன் (ஆசிரியர், கிளி/பற்றிமா றோ.க.த.பாடசாலை), சிவாஜன் (கஜன் கட்டிட ஒப்பந்தக்காரர்), அபர்ணா (ICTA மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வர்ஜினி, தினேஷ் (D.O கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரகன், ஆதன்யன், ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தங்கமலர் (முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர் பளை), அரியமலர் மற்றும் சிவஞானசுந்தரம் (கனடா), கமலாதேவி (சுவிஸ்), லோகஞானம் (ஓய்வு பெற்ற பிரதம தபாலதிபர் யாழ்), குணேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர் கொ/சாந்த றிளேயர்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற இராசரத்தினம் (இ.போ.ச), காசிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகத்தர் பளை), மரியா (கனடா), சுப்பிரமணியம் (மயூராமணியம் சுவிஸ்), இந்துமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மதியம் 01.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

80/5 பிரம்படிலேன்
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 511 8388, 077 844 9116

(CS 2011) V-1



# யாழ். மாநகரத்தில் புகையூட்டும் பணி

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ். மாநகரப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகம் இனங்காணப்பட்ட குடியி ருப்புப் பகுதிகளை உள்ளடக்கி புகையூட்டும் பணிகள் மாநகர சுகாதாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பணியா ளர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ரி-17)

# கழிவகற்றல் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தினை மாண வர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விசேட செயற் றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கல்லூரி நிர்வா கத்தினரால் 17 ஆயிரம் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் சேகரிக்கப்பட்டு மீள் சுழற்சிக்காக விற்பனை செய்யப் பட்டன. அதிகளவு பிளாஸ்ரிக் கொள்கலன்களை சேகரித்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன . (ச-25, 125)

# சஞ்சிகை வெளியீட்டு விழா

*யாழ்ப்பாணம், டிசெ.10*

*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட் டுக் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கலாசாலை யின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலா சாலை முதல்வர் ச.லலீசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.* (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.